RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s130

OPEN ACCESS

# சிலப்பதிகாரத்தில் மீவியல்பாற்றல்

மு. சுமதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.

# The Liminality in Silapathikaram

M. Sumathi [a, *]

[a] Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi, Tamil Nadu, India.

* Corresponding Author: nagajothid@gmail.com

Received: 13-03-2021
Revised: 24-01-2022
Accepted: 29-01-2022
Published: 26-02-2022

Check for updates

## ABSTRACT

'The spirit of ancient culture is boon to the present life'. The world consists of the five great powers (pancha boothangal) land, air, fire, water and universe. The different religious worshipping present in Hindu culture. Production, protection, destroying, blessings predict through liminality. The essay reveals the views of liminality present in silapathikaram how related with present people's principles. Humans who workshipped the nature, they workshipped the deities in the two forms, the minor deity and the super deity. To proclaim the God's blessing, they designed a god's statue, Idols and they celebrated a function to worship a god. In order to cover up the crimes committed by those who lived and died with them, the peace workship became as the deity worship. By praying soul, they hopped that the souls liminality will save and protect the people, so that they started workship a dead soul. All forums showed in silapathikaram had been seen as liminality. They had a fear and opinion that the God will punish the people , If anybody did a mistake. Many God's has been as liminality in silapathikaram, kannaghi has been shown as a Pathini God. She was not a goddess for a particular part of people , she is defined as a goddess for all Tamil people. After Thousands of years , apart from language, race, country till now kannaghi is believed as a goddess, because in silapthikaram, the liminality is released through kannaghi. This is the reason which makes kannaghi as a goddess.

**Keywords:** Silapathikaram, Ancient culture, Hindu Culture

## முன்னுரை

மீவியல்பாற்றல் என்பது இயற்கைக்கு அப்பாற்றப்பட்ட சக்திகள் உண்டு என்ற நம்பிக்கையை உணர்ந்து நாம் அவற்றை வழிபட்டுப் போற்றி வணங்குவதாகும். மீசமய நிகழ்வானது அச்சம், பாதுகாப்பு, நம்பிக்கை போன்றவற்றின் அடிப்படையில் தோற்றம் பெற்றது. ஒவ்வொரு தெய்வ வழிபாட்டிற்குப் பின்னும் உயிர்த்தியாகம் செய்தல், குலப்பெருமை காத்தல் போன்ற நிகழ்வுகள் காணப்படும்.

## இயற்கை வழிபாடு

பழந்தமிழர்கள் ஆதிகாலத்தில் இயற்கையையே வழிபட்டு வந்தார்கள். பிற்காலத்தில் தான் இறைவனைப் பல்வேறு பெயரிட்டு உருவவழிபாடு செய்து வழிபட்டார்கள். இளங்கோவடிகள் என்பவர் ஒரு சமணசமயத் துறவி. அவர் கண்ணில் காணும் தெய்வமான திங்களையும், ஞாயிற்றையும், மாமழையையும், பூம்புகாரினையுமே கடவுள் வணக்கமாகப் போற்றிப் பாடியுள்ளார். இயற்கையின்

கூறுகளான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள், அறக் கடவுளர்கள் போன்றோர்களை வழிபடும் தன்மையே காப்பியம் முழுவதும் காணப்படுகிறது.

## மீவியல் தன்மை

ஞாயிறானது நமக்கு ஒளியை மட்டும் தரவல்லது. அதிகாலையில் எழுந்து ஞாயிற்றின் அருள் கிடைத்திட இன்றும் நம்மவர்களால் சூரிய நமஸ்காரம் செய்யப்படுகிறது. வழக்கமாக நடைபெறும் நிகழ்வுகள் இயல்பானவை. இயல்பிலிருந்து விலகியவை மீவியல்புடையவை.

“ஆவி வழிபாட்டிலிருந்தே (Doctrine of spirits) சமயம் தோன்றியது என்று கூறும் டைலர், அக்கோட்பாட்டில் இறப்பு, கனவு ஆகியவற்றோடு தொடர்புடைய ஆன்மாக் கோட்பாடும் (Doctrine of souls) அடங்கும் எனக் கூறுகிறார். இயற்கையின் சீற்றத்திற்கும் கனவின் வியத்தகு நிகழ்ச்சிகளுக்கும், எதிரொலி கேட்டதற்கும், அந்தந்தப் பொருட்களில் உறையும் ஆவிகளே காரணமென நம்பத் தலைப்பட்ட தொன்மை மக்கள் வாழ்வுக்கும் இறப்புக்கும் ஆவிகளே காரணமெனக் கருதின” (Bhakthavatsala Bharathi, 1990).

அறிஞர்களின் இம்மானுடவியல் கோட்பாடானது. சிலம்பில் ஒப்பு நோக்குவதாக உள்ளது

“காணிகா,

வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்

ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டீமின்

ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டைக்க

பாய்திரை வேலிப் படுபொருள் நீ அறிதி

காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?

ஞாயிறு பேசுதல் என்பது மீவியல்பாற்றலாகவே இங்குக் காணப்படுகிறது (Venkadasamy Nattar, 2005).

கண்ணகி தன் கணவன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டான் என்ற செய்தியை அறிந்ததும் காய்கதிர்ச் செல்வனே என் கணவன் கள்வனா? என்று ஞாயிற்றைப் பார்த்துக் கேள்வி கேட்கிறாள். அதற்கு,

“கள்வனோ அல்லன், அல்லன், கருங்கயற்கண் மாதராய்,

ஒள்ளெரி உண்ணும். இவ்வூர் என்றது, ஒரு குரல்”

கருங்கயல் போன்ற கண்களையுடைய மாதரசியே அவன் கள்வன் அல்லன். இவ்வூரினைப் பெருந்தீ உண்ணப் போகின்றது என்ற ஒரு குரல் கூறியது (Venkadasamy Nattar, 2005).

## தீக்கடவுளின் மீவியல்பாற்றல்

கண்ணகி தன் கணவன் இறந்ததும் இறக்காமல் அவன் குற்றவாளி அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்காக தீக்கடவுளை அழைக்கிறாள்.

“இடமுலை கையால் திருகி, மதுரை

வலமுறை மும்முறை வாரா, அலமந்து

மட்டார்மறுகின் மணிமுலையை வட்டித்து

விட்டாள் எறிந்தாள், விளங்கு இழையாள்

கண்ணகி மதுரையை மூன்று முறை வலம் வந்து தன் இடப்பாக முலையினை கையினால் திருகி வட்டித்து விட்டெறிந்தார் (Venkadasamy Nattar, 2005).

“நீலநிறத்துத் தெரிசெக்கர் வார்சடைப்

பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலத்து

மாலை எரியங்க வானவன் தான் தோன்றி,

மாபத்தினி! நின்னை மாணப் பிழைத்த நாள்

பாயெரி இந்தப் பதியூட்ட, பண்டேயோர்

ஏவல் உடையேனால், யார்பிழைப்பார், ஈங்கு என்னப்”

கண்ணகி முன்னர் தீக்கடவுளான எரிக்கு அங்கி என்னும் வானவர் பார்ப்பனக் கோலத்திலே தோன்றினார் (Venkadasamy Nattar, 2005). மாபத்தினியே உனக்குப் பெருந்தவறு இழைத்த அந்நாளில் இந்நகரினைப் பாய்ந்து எரியூட்ட எனக்கு முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது. நான் யாரைப் பிழைக்க வைக்க வேண்டும் என்று கேட்கின்றார் தீக்கடவுள். மனிதன் தவறு ஏதும் செய்தால் பஞ்சபூதங்கள் நம்மைத் தண்டிக்கும் என்ற அச்சத்தினாலே ஒழுக்கத்துடன் வாழ்வர். பொற்கொல்லன் செய்த ஒழுக்கக் கேடான செயலால் இங்கு தீக்கடவுள் பத்தினியின் ஏவலுக்குப் பணிந்து அவள் கட்டளையை நிறைவேற்றுவதாகக் காப்பியத்துள் காணப்பட்டுள்ளது.

## மீவியல்பாற்றல் தெய்வங்கள்

சிலப்பதிகாரத்தில் மக்கள் இயற்கையை மட்டுமல்லாமல் திருமால், இந்திரன், முருகன், கொற்றவை போன்ற தெய்வங்களையும் வழிபட்டுள்ளனர். மக்களுக்கு சமுதாயத்தில் பிரச்சனை ஏற்படும் போது தெய்வமே வந்து தீர்த்து வைப்பதாக இவ்விலக்கியத்தில் காணப்படுகிறது.

இறந்தவர் மீண்டும் பிறக்க முடியாது என்பது நடைமுறை உண்மை. ஆனால் சிலம்பில் பாசண்ட சாத்தன் என்ற கடவுள் குழந்தை வடிவில் பிறந்து தாயின் துன்பத்தைத் தீர்த்ததாக செய்தி உள்ளது. மாலதி என்ற பெண் மாற்றாளின் மகவுக்குப் பாலூட்டினாள். பால் விக்கிப் பாலகனின் உயிர் போனது. அதனால் அவள் இறந்த குழந்தையை கையில் ஏந்திக் கொண்டு பல தெய்வங்களை வேண்டி அழுதாள்.

அப்போது அங்கே ஓர் இடாகினிப் பேய் வந்தது. அப்பேய் இறந்த குழந்தையின் பிணத்தைத் தன் வயிற்றுக்குள் போட்டுக் கொண்டது.

“இடுபிணம் தின்னும் இடாகினிப்பேய் வாங்கி,

மடிஅகத்து இட்டாள், மகவை”

என்ற பேய் பற்றிய கருத்து இக்காப்பியத்தில் அமைந்துள்ளது (Venkadasamy Nattar, 2005). பழந்தமிழ் இலக்கியத்தில் அணங்கு பற்றிய பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியர் அச்சம் தரும் மெய்ப்பாட்டியலுக்கு விளக்கமாக,

“அணங்கு விலங்கே கள்வர்தம் இறையெல்லாம்

பிணங்கல் சாலா அச்சம் நான்கே”

என்று அணங்கு முதலிய நான்கினைக் கூறியுள்ளார் (Subramanian, 1998). அணங்கு எனப்படுவது உருவம் உள்ளதாகவும், உருவம் அற்றதாகவும் காணப்படும். இடாகினிப் பேய் இளங்கொடி போல் வந்ததாக இளங்கோ வடிவமைத்துள்ளார். இன்றும் கிராமங்களில் பிறந்து சில நாட்களே ஆன குழந்தையை இசக்கி முதலிய பேய்கள் தூக்கிச் சென்றுவிடும். என்ற பயத்தினால் வீட்டின் முன் துணியால் சிறிய தொட்டிலை அமைத்து அத்தொட்டியில் கல்லைப் போட்டிடுவர். பேயானது

அவ்வீட்டில் குழந்தை இல்லை கல் தான் உள்ளது என்று ஏமாந்து சென்று விடும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் வாழந்து வருகின்றனர்.

## சாத்தனின் பேரருள்

மனிதனைக் காக்கும் பெரிய சக்தியாகவே இறைவன் காணப்படுகிறான். மக்கள் கண்ணீரைத் துடைத்து அவர்களுக்கு அருள்பவராக இறையருள் காணப்படுகிறது. பேயினால் உண்ணப்பட்ட குழந்தை மீண்டும் பிறக்காது. இரு தாயின் கண்ணீரைத் துடைப்பதற்காக இறைவனே குழந்தையாகப் பிறப்பதாக இக்காப்பியத்தில் காணப்படுகிறது.

தொன்மைச் சமயம் தோன்றிய முறையை விளக்க முற்பட்ட முதல் மானிடவியல் கோட்பாடே ‘ஆவிவழிபாடு’ (Animism) ஆகும். இக்கோட்பாட்டை 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கிலேய மானிடவியலறிஞர் எட்வர்டு பர்னட் டைலர் என்பவர் வகுத்தார். ஆவியுலகக் கோட்பாட்டின் மையக் கருத்தை டைலர் குறிப்பிடும்போது “சமயத்தின் தொடக்கம் ஆவிகளின் பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது என்கிறார். டைலரின் இக்கருத்து சமயத்தைப் பற்றிய குறைந்தபட்ட வரையறை எனச் சிறப்பித்துக் கூறப்படும் (Bhakthavatsala Bharathi, 1990).

“இடியுண்ட
மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு அச்சாத்தன்
அஞ்ஞை நீ ஏங்கி அழல், என்று, முன்னை
உயிர்க்குழவி காணாய்! என்று, அக்குழவி ஓர்
குயிற்பொதும்பர் நீழல் குறுக, அயிர்ப்பு இன்றி,
மாயக் குழவி எடுத்து, மடித்திரைத்துத்
தாய்கைக் கொடுத்; தாள். அத்தையலாள்”

குழந்தையை இழந்த தாயிடம் பாசண்ட சாத்தன் என்னும் கடவுள் அன்னையே அழாதே குழந்தை உயிருடன் தான் உள்ளது என்று கூறி குயில்களை உடைய சோலையின் ஒரு மரத்தடியில் சென்று குழந்தையாகிக் கிடந்தான் (Venkadasamy Nattar, 2005). மாற்றாந் தாயானவள் குழந்தையைத் தன் வயிற்றோடு அள்ளி அணைத்துக் கொண்டு வீடு நோக்கி வந்தாள். குழந்தையைப் பெற்ற தாயிடம் கொடுத்துத் தன் துயரத்திலிருந்து மீண்டெழுந்தாள்.

இவற்றில், இறந்த குழந்தையைப் பேய் உண்டதும், கடவுள் குழந்தையாகப் பிறந்து தாயின் கண்ணீரைத் துடைப்பதும் மீசமய நிகழ்வாகவே காணப்படுகிறது.

ஒரு தாயின் கண்ணீரைத் துடைக்க இறைவன் குழந்தையாகப் பிறந்த இச்செய்தி திருமூலர் அழுது கொண்டிருந்த பசுக்களின் கண்ணீரைத் துடைக்க மூலன் என்ற இடையனின் உடலில் தன் உயிரைச் செலுத்தி அப்பசுக்களின் கண்ணீரைத் துடைத்த நிகழ்ச்சியை ஒப்பு நோக்க வைக்கிறது. கடவுள், சித்தர் போன்றோர் மனிதர்களையும், விலங்குகளையும் காத்து அறப்பண்பில் சிறந்து காணப்படுகிறார்கள்.

## கொற்றவையின் மீசமய நிகழ்வு

சோழநாட்டில் பராசரன் என்ற பார்ப்பான் ஒருவர் இருந்தார். அவர் சேரனது கொடையினைக் கேள்விப்பட்டு அங்கே போய் சொல்லாற்றலிலே பிறரை வென்று அணிகலன்களைப் பரிசாகப் பெற்று வரும் வழியில் திருத்தண்கால் என்ற ஊரில் இளைப்பாறினார். மிகுதியாக பொருட்களை அளித்த மாந்தரஞ்சேரலை வாயார வாழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை அழைத்து எனக்கு இணையாக வேதங்களை ஓதுங்கள், வேதங்கள் நன்கு ஓதுபவர்க்கு பரிசு அளிப்பேன் என்று அவர் கூறினார். வார்த்திகனின் புதல்வன் தட்சிணாமூர்த்தி என்ற சிறுவன்

பராசரரின் உள்ளத்திலே மிகுந்த உவகை ஏற்படுமாறு வேதத்தை நன்கு உச்சரித்தான். அதனால் அப்பார்ப்பன் முத்துவடமாகிய பூணூலும், ஆபரணங்களும், கடகம் தோடு போன்றவற்றை அளித்துச் சென்றார். அவ்வூரில் உள்ள ஒரு சிலர் இப்பரிசுப் பொருட்களைத் திருடிய பொருட்கள் என்று பழி கூறினர். காவலர்களும் தக்கிணனின் தந்தையை சிறையில் அடைந்தனர். வார்த்திகனின் மனைவி கார்த்திகை என்பவள் அழுது புரண்டாள்.

"திறவாது அடைத்த திண்ணிலைக் கதவம்

மறவேல் மன்னவன் கேட்டனன் மயங்கின்

கொடுங்கால் உண்டுகொல்? கொற்றவைக் குற்ற

ஏவல் இளையவர் காவலன் தொழுது

வார்த்திகற் கொணர்ந்த வாய்மொழி உரைப்ப"

குற்றமற்றவர்கள் கண்ணீரைத் துடைப்பவர்களாகவே சிலம்பில் தெய்வங்கள் காணப்படுகின்றன (Venkadasamy Nattar, 2005). கார்த்திகை என்பவள் அழுததும் கொற்றவையின் கோயில் கதவு திறக்க முடியாத அளவிற்கு மூடிக் கொண்டது. இதனை அறிந்த மன்னவன் நாம் கொடுங்கோலாட்சி செய்து விட்டோமோ என்று ஐயப்படுகிறான். தவறு எதுவும் நடந்து விட்டதா? கண்டறிந்து வாருங்கள் என்று ஏவலாளர்களை அனுப்புகிறான். மன்னனிடம் ஏவல் இளையவர் வார்த்திகனைக் கொணர்ந்த செய்தியினைக் கூறுகின்றனர். மன்னன் நேர்மையற்ற இச்செயிலினைக் கண்டித்து அறநெறியுடன் திருத்தண்காலை வார்த்திகனுக்கு அளித்தான். அதன் பின் மலையினை ஒத்த நிலைக் கதவினை உடைய கொற்றவையின் கோயில் கதவு பேரொலியுடன் திறந்து கொண்டது.

கொற்றவை என்ற கடவுள் நேர்மையானவர்களைக் காப்பாற்றுபவளாக மன்னன் தவறிழைத்தால் அதனைஎடுத்துக் கூறுபவளாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளாள். மீசமய தெய்வ நம்பிக்கை "அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும்" என்று காப்பியம் முழுவதும் பயணிப்பதாக அமைந்துள்ளது.

## பூதங்கள்

"பூதம் என்பது பெருந்தெய்வங்களின்று வேறுபட்டுக் காவல் தெய்வம் என்ற நிலையில் பயின்று வந்துள்ளதனையே இலக்கியங்கள் தெரிவிக்கின்றன இவை அங்காடி, நாற்சந்தியாகிய கோட்டம், களம் ஆகிய இடங்களில் உறையும் காவற்பூதமாகக் காட்டப்படுகின்றன. இப்பூதங்கள் மனிதனுக்குப் பாதுகாப்பாகவும் அவனை நன்னெறியில் உய்விக்கும் சக்தி பெற்று விளங்கியவாகவும் தென்படக் காண்கிறோம். பூதத்தின் தோற்றம் பற்றிக் கருத்துக் கூறுபவர்களில் உலக நாகரிக வரலாற்றை எழுதிய வில் டூரண்ட் என்பவர் "பூத வழிபாடே முன்னோர் வழிபாடாயிற்று என்ற கருத்தினைத் தெரிவித்துள்ளார்" (Gandhi, 1980).

இக்கூற்றிற்கேற்பவே சிலப்பதிகாரத்தில் பூதங்கள் பற்றிய மீவியல்பாற்றல்கள் காணப்படுகின்றன.

"பத்தினி ஒருத்தி படிற்றுரை எய்த,

மற்றவள் கணவற்கு வறியொன் ஒருவன்

அறியாக் கரிபொய்த்து, அறைந்துணும் பூதத்துக்

கறைகெழு பாசத்துக் கையகப் படலும்"

கோவலனின் நற்பண்புகளைக் கூறும் போது பூதத்தின் மீவியல்புகளை இளங்கோ விவரித்துள்ளார் (Venkadasamy Nattar, 2005). பத்தினி ஒருத்தியின் கணவனிடம் சென்று, அப்பத்தினி பலி ஏற்கும்படி ஒருவன் பொய்களைக் கூறினான். இதனால் கோபமுற்ற பூதம் அவனை புடைத்துண்ணத் தயாரானது. அக்கீழ்மகனின் தாய் அழுது புலம்பினாள். கோவலன் அத்தாயின் கண்ணீரைத் துடைக்கும் பொருட்டு பூதத்திடம் தன்னை உண்ணுமாறு கூறினான்.

“நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு

பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை”

என்று பூதமானது அப்பொய்யனை அறைந்து கொன்றது (Venkadasamy Nattar, 2005).

பூதங்கள் எனப்படுபவை அறத்தைக் காக்கும் சக்தியாக சிலம்பில் மீவியல்பாற்றலுடன் செயல்படுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

## வழிபாட்டு முறை

கண்ணகி தன் கணவன் கோவலனுடன் பதினான்காம் நாள் வானூர்தியிலே ஏறி வானகஞ் சென்றாள். திருச்செங்கோடு என்ற இடத்திலே வேப்ப மரத்தின் அடியிலே கண்ணகி அமர்ந்திருந்தாள். முருகக் கடவுளை வழிபடும் குறவர்கள் அனைவரும் ஒன்றுகூடி கண்ணகியை அவ்விடத்திலே வழிபட்டனர்.

“தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுவானைத்

தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால் தெய்வமாய்

மண்ணக மாதர்க்கு அணியாயா கண்ணகி

விண்ணக மாதர்க்கு விருந்து”

என்று சிலம்பின் பாடலுக்கேற்ப கண்ணகி என்ற பத்தினிக் கடவுளுக்கு சேரமன்னன் இமயத்தில் சென்று கல்லெடுத்து அக்கல்லைப் புனித நீராற்றி வடநாட்டு அரசன் கனகவிசயன் தலையிலே சுமத்திய அக்கல்லிலே கண்ணகிக்குச் சிலையெடுத்தனர் (Venkadasamy Nattar, 2005). உலகில் முதன் முதலில் பெண்ணுக்குச் சிலை எடுத்து வழிபட்ட பெருமை சேர அரசன் செங்குட்டுவனையே சாரும். கண்ணகியின் தோழி தேவந்தி கண்ணகி கோயிலின் முதல் பெண் பூசாரியாகக் காணப்பட்டாள்.

பெண் தெய்வங்களில் பகைவரால் கொல்லப்பட்டோர், பாலியல் வன்முறையை எதிர்க்கும் முயற்சியில் இறந்தோர், பாலியல் வன்முறையிலிருந்து தப்பிக்கவும், அதை எதிர்க்கவும் தற்கொலை செய்துகொண்டோர், கணவனோடு உயிர் நீத்தோர் ஆகியோரே வீரவழிபாட்டுக்கு உரியவராவர். பொதுவாக வீரவழிபாட்டிற்கு உரியவர்கள் எல்லாம் அகால மரணத்தைச் சந்தித்தவர்கள் ஆவர்.

வீரவழிபாட்டு நெறியில் இரண்டு சாரார் ஒரே தெய்வத்தை வழிபடுவதும் உண்டு. கொல்லப்பட்ட வீரனைச் சார்ந்த பிரிவினர் அவன் வீரத்தையும், பிற வரங்களையும் வேண்டி வழிபடுவர். கொன்ற பிரிவினர் கொல்லப்பட்ட வீரனின் ஆவியால் தாங்கள் பழிவாங்கப்படக் கூடாது என்பதற்காக ‘சமாதானம்’ (சாந்திச் சடங்குகள்) செய்து வணங்குவர் (Paramasivan, 2001).

கண்ணகி வழிபாடு இன்று மாரியம்மன் வழிபாடாகக் காணப்படுவதாக ஒரு சிலர் கருதுகின்றனர். பல்வேறு உலக நாடுகளிலும் கண்ணகி வழிபாடு காணப்படுகிறது. இலங்கையில் மட்டும் 12 இடங்களில் கண்ணகி கோவில் உள்ளது. மதுரை, கேரளா போன்ற இடங்களிலும் குறவர் இன மக்களாலும் கண்ணகி பத்தினிக் கடவுளாகப் போற்றப்படுகிறாள்.

கண்ணகியின் கணவன் கோவலனுடன் அவள் வானூர்தியில் சென்றது மீவியல்பாற்றலாகவே காணப்படுகிறது. கண்ணகி தன் தோழி தேவந்தியிடம் பாண்டியன் குற்றமற்றவன் அவன் என்னுடைய தந்தை. நான் அவனின் மகளே அவன் தேவலோகத்தில் உள்ளான். நீங்கள் என்னை உறவினர்களுடன் கூடி வந்து வழிபட்டு மகிழுங்கள் என்ற கூறுகின்றாள். கண்ணகி வேம்பின் நிழலில் அமர்ந்ததனால் அவள் சக்தியின் வடிவமாகவே போற்றப்படுகிறாள்.

## முடிவுரை

உலகில் நன்மைகள் நிலைத்து தீமைகளை அறுப்பதற்காக மீசமய ஆற்றல்கள் நிறைந்து காணப்படுவதாக இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது. திருடுதல், பொய்கூறுதல் போன்ற

தீச்செயல்கள் செய்தால் ஞாயிறு, திங்கள், நெருப்பு போன்ற பஞ்ச பூதங்களும், தெய்வங்களும் தண்டிக்கும். மேலும் நல்லவர்களைப் பூதங்கள் புடைத்து உண்ணாது. தெய்வங்கள் நல்லோரின் கண்ணீரைத் துடைக்கும் ஆற்றல் பெற்றவை என்ற உண்மையை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் பல்வேறு இடங்களில் மீவியல்பாற்றல்கள் மூலம் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். மானிடர்களின் வாழ்வியல் குறித்த செய்திகள் அக்கால மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் குறித்து நம்மால் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

## Reference

Bhakthavatsala Bharathi, S., (1990) Panpattu Manidaviyal, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Gandhi, K., (1980) Thamizhar Pazhakka Vazhakkangalum Nambikkaigalum, International Institute of Tamil Studies, Chennai, India.

Paramasivan, Tho., (2001) Panpattu Asaivugal, Kalachuvadu Publications, Nagercoil, India.

Subramanian, S, V, S., (1998) Tholkaapiyam Thelivurai, Manickavasagar pathippagam, Chennai, India.

Venkadasamy Nattar, Na, Mu., (2005) Silappathikaram, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License